முழுப் பதிப்புரிமையுடையது.

## இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

## மட்டம் II பரீட்சை – 2024 சனவரி

# (204) வணிக முகாமைத்துவம்

(Business Management)

2024-02-11
பிற்பகல்
[01.45 – 05.00]

பக்கங்கள் : 06
வினாக்கள் : 07

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
*விடையெழுத : 03 மணித்தியாலங்கள்*

(2) ***சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***

(3) *வழங்கப்பட்டுள்ள **விடைப் புத்தகத்தில்** நீங்கள் விண்ணப்பித்த **மொழி மூலத்திலேயே விடைகள்** எழுதப்படல் வேண்டும்.*

(4) *ஏதாவது எடுகோள்களை நீங்கள் மேற்கொண்டிருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*

(5) ***செயல் வினைச் சொற்களின் செவ்வை நிரல்** அவற்றின் **வரைவிலக்கணங்களுடன்** இணைக்கப் பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்கள் தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு **செயல் வினைச் சொல்லை** கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் செயல் வினைச் சொல் செவ்வை நிரலில் தரப்பட்டுள்ள வரைவிலக்கணங்களின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(6) *100 புள்ளிகள்*

---

# பகுதி A

### நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 01

*இல. **1.1** தொடக்கம் **1.5** வரையான வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க. தெரிவு செய்யப்பட்ட விடையின் இலக்கத்தை அதற்குரிய வினா இலக்கத்துடன் உமது விடைப் புத்தகத்தில் எழுதுக.*

**1.1** கீழ்வருவனவற்றுள் ஒரு நிறுவனத்தின் வெகுமதிகளைத் தீர்மானிக்கின்ற உள்ளகக் காரணி எது?

(1) நாட்டின் வாழ்க்கைச் செலவு. (2) வேலையின் பெறுமதி.

(3) தொழிற்சந்தை நிலைமைகள். (4) பொருளாதார நிலைமைகள்.

**1.2** கீழ்வருவனவற்றுள் நிறுவனமொன்றின் தொழிற்பாட்டு முகாமைத்துவத்தில் ஒரு பிரதான தொழிற்பாடாக அமைவது எது?

(1) விளம்பரப்படுத்தல் பிரச்சாரங்களை விருத்தி செய்தல்.

(2) ஊழியர் நன்மைகளையும் சம்பளப்பட்டியலையும் முகாமை செய்தல.

(3) வளங்களின் வினைத்திறனான பாவனையை உறுதிப்படுத்துதலும் பொருள்கள் மற்றும் சேவைகளை வழங்குதலும்.

(4) சந்தை ஆய்வுகளையும் பகுப்பாய்வையும் நடத்துதல்.

**1.3** கீழ்வருவனவற்றுள் பயனுறுதிவாய்ந்த துண்டமாக்கலுக்கு (segmentation) தேவையானது எது?

(1) வேறுபடுத்தத்தக்கது.
(2) அளவிடத்தக்கது.
(3) போதுமான தன்மை.
(4) மேற்கூறிய யாவும்.

**1.4** வேலையின் கடமைகள், பொறுப்புகள், அறிக்கையிடல் தொடர்புகள், பணி நிலைமைகள் மற்றும் மேற்பார்வைப் பொறுப்புகள் ஆகியவற்றைக் கொண்ட ஒரு பட்டியல் எவ்வாறு அழைக்கப்படுகிறது?

(1) வேலை விவரணம் (Job Description)
(2) வேலைப் பகுப்பாய்வு (Job Analysis)
(3) வேலை விரிவாக்கம் (Job Enlargement)
(4) வேலை மேம்படுத்தல் (Job Enrichment).

**1.5** வணிக நடவடிக்கைகளிலுள்ள வினைத்திறன், பயனுறுதித்தன்மை மற்றும் உற்பத்தித்திறனுடன் தொடர்புடைய சரியான கூற்றைத் தெரிவு செய்க :

(1) பயனுறுதித்தன்மை என்பது உற்பத்தித்திறனுக்கு நிகரானது என்பதுடன் அவை இரண்டும் வினைத்திறனை அடைந்துகொள்வதற்கு அவசியமானதாகும்.

(2) வினைத்திறனானது விரயத்தைக் குறைத்து, வெளியீட்டை அதிகரிப்பதில் கவனம் செலுத்துவதுடன் பயனுறுதித்தன்மை சரியான இலக்குகளை அடைவதை வலியுறுத்துகின்றது. மேலும் உற்பத்தித்திறன் என்பது குறிப்பிட்ட நேரத்திலுள்ள உள்ளீடு மற்றும் வெளியீட்டிற்கு இடையிலான தொடர்பாகும்.

(3) வணிகச் செயற்பாடுகளில் பயனுறுதித்தன்மை என்பது முதன்மையான கரிசினைக்குரியது என்பதுடன் வினைத்திறனும் உற்பத்தித்திறனும் இரண்டாம்நிலை கரிசினைகளுக்குரியதாகும்.

(4) வணிகச் செயற்பாடுகளில் உற்பத்தித்திறன் வள உத்தமப்படுத்தலை உறுதிசெய்வதுடன் வினைத்திறனும் பயனுறுதித்தன்மையும் சம்பந்தமற்ற கருத்தியல்கள் ஆகும்.

(02 புள்ளிகள் வீதம், 10 புள்ளிகள்)

*வினா இல.* **1.6** *தொடக்கம்* **1.10** *வரை உள்ள இடைவெளிகளை நிரப்புவதற்கு, அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ள சொல் / சொற்களைத் தேர்ந்தெடுக்கவும். வினா இலக்கத்தைக் குறிப்பிட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட சொல் / சொற்களை உங்கள் விடைப் புத்தகத்தில் எழுதவும்.*

**1.6** ...................... *(முகாமை / சந்தைப்படுத்தல்)* என்பது நிறுவன இலக்குகளை அடைவதற்கு வளங்களை ஒருங்கிணைத்து மேற்பார்வை செய்வதில் ஈடுபடுவதாகும்.

**1.7** ...................... *(உப ஒப்பந்தம் / முடிவுறுத்தல்)* என்பது மனித வள மிகைக்கான ஒரு தந்திரோபாயம் ஆகும்.

**1.8** ...................... *(சந்தை அபிவிருத்தி / சந்தை ஊடுருவல்)* என்பது தற்போதுள்ள சந்தைகளில் காணப்படுகின்ற பொருள்கள் மற்றும் சேவைகளுக்கு பெரியளவிலான சந்தைப் பங்கைப் பெற்றுக் கொள்வதாகும்.

**1.9** ...................... *(வாடிக்கையாளர் திருப்தி / பங்குதாரர் திருப்தி)* என்பது யப்பானிய முகாமைத்துவப் பாணியின் ஒரு பண்பாகும்.

**1.10** ...................... *(உரு மாற்றம் / தந்திரோபாய மாற்றம்)* ஆனது நிறுவனத்தின் நோக்கங்கள், பணிகள், வாடிக்கையாளர் வளர்ச்சி, தரம், புத்தாக்கம் போன்றவற்றை மாற்றுவதுடன் தொடர்புடையது.

(01 புள்ளி வீதம், 05 புள்ளிகள்)

*இல.* **1.11** *தொடக்கம்* **1.15** *வரையான வினாக்களுக்கான விடைகளை, உமது விடைப் புத்தகத்தில் வினா இலக்கத்தைக் குறிப்பிட்டு அதற்கு எதிரே எழுதவும்.*

**1.11** சிறந்த தந்திரோபாயத்தின் இரண்டு (02) பண்புகளை (characteristics) இனங்காண்க.

**1.12** மனித வள முகாமைத்துவத்தின் இரண்டு (02) நோக்கங்களைக் (objectives) குறிப்பிடுக.

**1.13** ஒரு நிறுவனத்தின் வழங்கல் சங்கிலியை முகாமை செய்வதற்கான இரண்டு (02) தந்திரோபாயங் களைக் குறிப்பிடுக.

**1.14** தந்திரோபாயத் திட்டமிடல் செயன்முறையிலுள்ள GAP பகுப்பாய்வு என்பதால் கருதப்படுவது யாதெனச் சுருக்கமாக விபரிக்குக.

**1.15** மாற்றத்திற்கான தடைகளைச் சமாளிப்பதற்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ள இரண்டு (02) நடவடிக்கை களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள் வீதம், 10 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

# <u>பகுதி B</u>

(மொத்தம் 50 புள்ளிகள்)

## வினா 02

நிறுவன இலக்குகளை அடைவதற்காக வளங்களைத் திட்டமிடுதல், ஒழுங்கமைத்தல், வழிநடத்தல் மற்றும் கட்டுப்படுத்தல் ஆகியவற்றுக்குப் பொறுப்பானவர்களாக இருப்பதால் முகாமையாளர்கள் நவீன வணிகங்களில் முக்கிய பங்கினை ஆற்றுகின்றனர். வணிகத்தின் வெற்றிக்கான வெளிப்புறச் சூழலில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்றவாறு பயனுறுதிவாய்ந்த தீர்மானமெடுத்தலை உறுதி செய்வதற்கும் அவர்கள் பொறுப்பானவர்களாக இருக்கின்றனர்.

**நீங்கள் செய்ய வேண்டியவை:**

(a) ஒரு நிறுவனத்திலுள்ள முகாமையாளர் ஒருவரால் ஆற்றப்படுகின்ற இரண்டு (02) பிரதான முகாமை சார்ந்த வகிபாகங்களை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(b) தீர்மானமெடுத்தலின் இரண்டு (02) முக்கியத்துவத்தை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(c) தனிப்பட்ட தீர்மானமெடுத்தல் வேலைச்சட்டகத்திற்கு இணங்க, இரண்டு (02) தீர்மான மாதிரிகளை **இனங்காண்க.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 03

திட்டமிடல் என்பது நோக்கங்களை நிர்ணயித்து, அத்தகைய நோக்கங்களை அடைவதற்குத் தேவையான நடவடிக்கைகள், வளங்கள் மற்றும் காலக்கெடுவைத் தீர்மானிக்கின்ற செயன்முறை ஆகும். பயனுறுதிமிக்க திட்டமிடலானது தீர்மானமெடுத்தல், வள ஒதுக்கீடு மற்றும் இலக்கினை அடைவதற்கான ஒரு கட்டமைக்கப்பட்ட வேலைச் சட்டகத்தை வழங்குகிறது.

**நீங்கள் செய்ய வேண்டியவை:**

(a) திட்டமிடலின் மூன்று (03) கோட்பாடுகளை **இனங்காண்க.** (03 புள்ளிகள்)

(b) திட்டமிடல் செயன்முறையைக் **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(c) திட்டமிடலின் இரண்டு (02) பண்புகளை (characteristics) **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 04

தலைமைத்துவக் கோட்பாடுகள் என்பது பயனுறுதிவாய்ந்த தலைவர்கள் எவ்வாறு உருவாகின்றனர் / வளர்ச்சியடைகின்றனர் மற்றும் செயற்படுகின்றனர் என்பதை விளக்க முற்படுகின்ற ஒரு வேலைச் சட்டகமாகும். இந்தக் கோட்பாடுகள் தலைமைத்துவப் பாணிகள், பண்புகள் மற்றும் நடத்தைகள் பற்றிய பார்வையைத் தருகின்றன. தலைமைத்துவக் கோட்பாடுகள் தலைமைத்துவ அபிவிருத்தி மற்றும் நிறுவன வெற்றிக்கான பெறுமதிவாய்ந்த முன்னோக்குகளை வழங்குகின்றன. மேலும், பயனுறுதிவாய்ந்த தலைவர்கள் தங்களுக்குக் கீழ் பணிபுரிபவர்களை ஊக்குவித்து, ஒரு நிறுவனத்தின் மாற்ற முகவர்களாகத் தொழிற்படுகின்றனர்.

**நீங்கள் செய்ய வேண்டியவை:**

(a) "பீட்லரின் சூழ்நிலைசார் தலைமைத்துவக் கோட்பாடு" இனால் இனங்காணப்பட்ட இரண்டு (02) வகையான தலைவர்களை **விபரிக்குக.**

(04 புள்ளிகள்)

(b) ஒரு தலைவராக ஊழியர்களை ஊக்குப்படுத்துகின்ற மூன்று (03) வழிகளை (ways) **விபரிக்குக.**

(06 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 05

பயனுறுதிமிக்க தொடர்பாடல் என்பது கூர்ந்து கேட்டல், பரிவு மற்றும் பொருத்தமான வழிமுறைகள் மற்றும் ஊடகத்தைப் பயன்படுத்துவது ஆகியவற்றுடன் தொடர்புடையதாகும். பயனுறுதிமிக்க தொடர்பாடல் ஆனது கருத்துக்கள், உணர்வுகள் மற்றும் தகவல்களின் பரஸ்பர பரிமாற்றத்தை ஊக்குவிப்பதுடன் தனிப்பட்ட மற்றும் தொழில்சார் சூழ்நிலைகளில் ஒத்துழைப்பு, நம்பிக்கை மற்றும் இணக்கமான உறவுகளை வளர்க்கிறது. இது நிறுவனத்தின் கட்டுப்படுத்தல் செயன்முறையிலும்கூட உதவுகிறது.

**நீங்கள் செய்ய வேண்டியவை:**

(a) பயனுறுதிமிக்க தொடர்பாடலின் இரண்டு (02) பண்புகளைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(b) முகாமையாளருக்குத் தேவையான இரண்டு (02) தொடர்பாடல் திறன்களை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(c) கட்டுப்படுத்தல் நுட்பங்கள் இரண்டினை (02) **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 06

சந்தைப்படுத்தல் எந்தவொரு வணிக நிறுவனத்திற்கும் முக்கியமானதொன்றாகும். இது நிறுவனம் தொழிற்படுகின்ற சந்தையில் போட்டி அனுகூலங்களைப் பெறுவதற்கு உதவுகிறது. தகவல் தொழினுட்பத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்களால் சந்தைப்படுத்தல் தொழிற்பாடுகள் உட்பட பெரும்பாலும் நிறுவனத்தில் உள்ள அனைத்துத் தொழிற்பாடுகளும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

**நீங்கள் செய்ய வேண்டியவை:**

(a) ஒரு நிறுவனத்திற்கான சந்தைப்படுத்தல் கலவையின் இரண்டு (02) முக்கியத்துவத்தை **விபரிக்குக.**

(04 புள்ளிகள்)

(b) ஒரு நிறுவனத்திற்கான பண்டக்குறியிடலின் (branding) இரண்டு (02) முக்கியத்துவத்தை **விபரிக்குக.**

(04 புள்ளிகள்)

(c) ஒரு வணிகத்தின் தொழிற்பாட்டில் புதிய தொழினுட்பத்தின் இரண்டு (02) தாக்கங்களை **இனங்காண்க.**

(02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

# <u>பகுதி C</u>

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 07

**வரையறுக்கப்பட்ட XYZ கம்பனி** அதிநவீன நடமாடும் செயலிகளை (mobile applications) உருவாக்குவதில் நிபுணத்துவம் பெற்றதாகும். அது வெற்றியை நோக்கிப் பயணிக்கும்போது, சந்தைப்படுத்தல், மனித வள முகாமைத்துவம், செயற்பாடுகள் மற்றும் தந்திரோபாய முகாமைத்துவம் ஆகிய துறைகளில் பல்வேறு சவால்களையும் வாய்ப்புகளையும் எதிர்கொள்கிறது.

ஒரு போட்டித்தன்மையைப் பெறுவதற்காக, **வரையறுக்கப்பட்ட XYZ கம்பனி** தனிப்பட்ட நிதிகளை முகாமை செய்யும் வகையில் புரட்சிகரமாக வடிவமைக்கப்பட்ட புதிய நடமாடும் செயலியை அறிமுகப்படுத்துகிறது. சந்தைப்படுத்தல் அணியானது இலக்கு வைக்கப்படுகின்ற மக்கள் தொகையை அடையாளம் காண்பதற்காகவும் ஒரு தனித்துவமான பெறுமதித் தெரிவினை (value proposition) உருவாக்கி ஒரு வசீகரமான பண்டக்குறியை விருத்தி செய்வதற்காகவும் விளம்பரப் பிரச்சாரத்தை மேற்கொள்வதற்காகவும் சந்தை ஆய்வை உள்ளடக்கிய ஒரு முற்றடக்கமான தந்திரோபாயத்தை வடிவமைத்திருக்கிறது. நவீன காலத்தவர்களையும் Z தலைமுறையைச் சேர்ந்த பார்வையாளர்களையும் சென்றடைவதற்கு சமூக ஊடகங்கள் மற்றும் செல்வாக்குச் செலுத்தும் பங்குடமைகளைப் பயன்படுத்த அவர்கள் திட்டமிடுகின்றனர். பிரதான செயலாற்றுகைக் குறிகாட்டிகள் மற்றும் வாடிக்கையாளர் பின்னூட்டங்களைக் கண்காணிப்பதன் மூலம் சந்தைப்படுத்தல் அணி தொடர்ந்து தமது அணுகுமுறையை செம்மைப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. **வரையறுக்கப்பட்ட XYZ கம்பனி** விரிவடையும்போது, ஆற்றல்மிகுந்த ஊழியர்களை ஈர்ப்பதிலும் தக்கவைத்துக் கொள்வதிலும் அதன் மனித வளப் பிரிவு சவால்களை எதிர்கொள்கிறது.

**வரையறுக்கப்பட்ட XYZ கம்பனியின்** வெற்றிக்கு வினைத்திறனான செயற்பாடுகள் அவசியமானதாகும். இதை உறுதிப்படுத்த, செயலிகளை உருவாக்குதல், தரக் கட்டுப்பாடு மற்றும் வாடிக்கையாளர் ஆதரவு ஆகியவற்றில் தன்னியக்க முறையை அவர்கள் தழுவிக் கொண்டனர். லீன் கோட்பாடுகள் அவர்களது வழங்கல் சங்கிலியை வழிநடத்துவதுடன் விரயங்களைக் குறைத்து வினைத்திறனை உச்சப்படுத்துகின்றன. தொழினுட்பப் பிரச்சினைகளை உடனுக்குடன் தீர்ப்பதற்கும் செயலியை சீராக இயங்க வைப்பதற்கும் செயற்பாட்டு அணியானது தகவல் தொழினுட்பத் துறையுடன் நெருக்கமான ஒத்துழைப்பைப் பேணுகிறது. மிகையான இருப்பு அல்லது பற்றாக்குறையை தடுப்பதற்காக தொக்கு முகாமை உகந்ததாக்கப்பட்டுள்ளது. அதிநவீன தொழினுட்பத்தைத் தழுவுவதன் மூலம், **வரையறுக்கப்பட்ட XYZ கம்பனி** அதன் செயற்பாடுகளை தொடர்ந்து மேம்படுத்த முயல்கிறது.

**நீங்கள் செய்ய வேண்டியவை:**

(a) **வரையறுக்கப்பட்ட XYZ கம்பனி**யின் சந்தைப்படுத்தல் அணியால் அடையாளங் காணப்பட்ட குறித்த தந்திரோபாயங்கள் கம்பனி அதன் இலக்குப் பார்வையாளர்களை (target audience) அடைவதற்கு எவ்வாறு உதவும் என்பதை **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

(b) **வரையறுக்கப்பட்ட XYZ கம்பனி** அதன் ஊழியர்களை தக்கவைத்துக் கொள்வதற்கு நடைமுறைப் படுத்தக்கூடிய மூன்று (03) பரிந்துரைகளை **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(c) **வரையறுக்கப்பட்ட XYZ கம்பனி** தமது செயற்பாடுகளில் கூட்டிணைத்துள்ள மூன்று (03) குறிப்பான தன்னியக்கத் தொழினுட்பங்களை **அடையாளங் காண்க.** (03 புள்ளிகள்)

(d) **வரையறுக்கப்பட்ட XYZ கம்பனி** அவர்களது போட்டி அனுகூலத்தைப் பேணுவதற்கு மாறும் சந்தை நிலைமைகள் மற்றும் தொழினுட்பப் போக்குகளுக்கு ஏற்ப எவ்வாறு தம்மை மாற்றியமைக்கலாம் என்பதற்கான மூன்று (03) வழிமுறைகளை (ways) **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(e) **வரையறுக்கப்பட்ட XYZ கம்பனியால்** மொத்த தர முகாமைத்துவம் (TQM) ஊடாக அடைந்து கொள்ளக்கூடிய ஐந்து (05) அனுகூலங்களைக் **குறிப்பிடுக.** (05 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **அறிவு (1)** | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | **வரைக (Draw)** | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | **கூறுக/ குறிப்பிடுக(State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | **அடையாளங்காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **முற்றடக்கம் (2)** | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | **ஏற்பிசைவு செய்க (Recognize)** | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | **பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret)** | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | **விளக்குக (Describe)** | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | **விபரிக்குக (Explain)** | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | **பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define)** | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பிரயோகம் (3)** | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile)** | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | **வரைக (Graph)** | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | **தயாரிக்குக (Prepare)** | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | **எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate)** | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate)** | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பகுப்பாய்வு (4)** | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | **தொடர்பாடுக(Communicate)** | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | **சுருக்கமாகக குறிப்பிடுக(Outline)** | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | **வேறுபடுத்துக (Contrast)** | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss)** | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | **வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |